செ.வெ.எண்: 59 நாள்: 21.02.2017

**முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது அரசு அலுவலர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.02.2017) நடைபெற்றது.

இந்த சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குறைகளை போக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்குறை தீர்க்கும் கூட்டத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்கல், வீடு வழங்கல், இராணுவ கேண்டீன் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை தொடர்பாக மொத்தம் 29 மனுக்கள் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) (பொ) திருமதி.இராமலெட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, அரசு அலுவலர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**